அனுப்புநர்
உறுப்பினர்–செயலர்,
சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்,
1, காந்தி–இர்வின் சாலை,
எழும்பூர், சென்னை – 600 008.

பெறுநர்
ஆணையர்,
குன்றத்தூர் பஞ்சாயத்து ஒன்றியம்
சென்னை

கடித எண். பிசி1/14247/2016

தேதி 06.02.2018

ஐயா,

பொருள்: செ.பெ.வ.குழுமம் – திட்ட அனுமதி – நில அளவை எண். 133/1A, 134/2, 136/1, 136/2A, 136/2B, 137, 138, 139, 140, 141/1A1, 141/1B & 141/2 குளத்துவாஞ்சேரி கிராமம், சென்னை–ல், வாகன நிறுத்து தளம் பகுதி/தரைத்தளம் பகுதி + 3 தளங்கள் + 4வது தளம் பகுதியுடன் 416 குடியிருப்புகள் கொண்ட 16 பிளாக்குகள், குறைந்த வருவாய் பிரிவினருக்கான வாகன நிறுத்து தளம் + 4 தளங்களுடன் கூடிய 4 பிளாக்குகள் மற்றும் வாகன நிறுத்து தளம் பகுதி/தரைத்தளம் பகுதி + முதல் தளம் பகுதி + 3 தளங்களுடன் கூடிய 2 பிளாக்குகள் கொண்ட 360 குடியிருப்புகள் மொத்தம் 776 குடியிருப்புகளுடன் கொண்ட குடியிருப்புக் கட்டிடங்கள் மற்றும் தரைத்தளம் + முதல் தளம் + 2வது தளம் பகுதி கொண்ட 3 வணிக பிளாக்குகள், தரைத்தளம் + முதல் தளம் கொண்ட க்ளப் ஹவுஸ் கட்டிடத்துடன் கூடிய தொகுப்புக் குடியிருப்புக் கட்டிடம் – ஒப்பளிக்கப்பட்டிருப்பது – தொடர்பாக.

பார்வை:
1. சிறப்புக் கட்டிட பிரிவு எண். 664/2016 நாள் 16.9.2016 அன்று கிடைக்கப் பெற்ற திட்ட அனுமதி விண்ணப்பம்.
2. அரசாணை (பல்வகை) எண் 163, வீ.வ,மற்றும் ந.வ.துறை ந.வ. (ந.வ.4(1) துறை நாள் 09.09.2009.
3. அரசாணை (பல்வகை) எண் 86, வீ.வ,மற்றும் ந.வ.துறை ந.வ. (ந.வ.4(1) துறை நாள் 28.3.2012.
4. அரசாணை (பல்வகை) எண் 112, வீ.வ,மற்றும் ந.வ.துறை நாள் 22.06.2017.
5. சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகத்தின் கடித எண் SEIAA/ TN/F 6460/EC/8(a)/557/2017 நாள் 24.01.2018.
6. வளர்ச்சிக் கட்டணம் மற்றும் பிற கட்டணங்கள் கோருதல் குறித்து விண்ணப்பதாரருக்கு அனுப்பிய இதே எண் கொண்ட இவ்வலுவலக கடித நாள் 03.02.2017 மற்றும் 15.6.2017.
7. விண்ணப்பதாரரிடமிருந்து கடிதம் கிடைக்கப் பெற்ற நாள் 30.05.2017, 14.07.2017.

****

நில அளவை எண். 133/1A, 134/2, 136/1, 136/2A, 136/2B, 137, 138, 139, 140, 141/1A1, 141/1B & 141/2 குளத்துவாஞ்சேரி கிராமம், சென்னை–ல், வாகன நிறுத்து தளம் பகுதி/தரைத்தளம் பகுதி + 3 தளங்கள் + 4வது தளம் பகுதியுடன் 416 குடியிருப்புகள் கொண்ட 16 பிளாக்குகள், குறைந்த வருவாய் பிரிவினருக்கான வாகன நிறுத்து தளம் + 4 தளங்களுடன் கூடிய 4 பிளாக்குகள் மற்றும் வாகன நிறுத்து தளம் பகுதி/தரைத்தளம் பகுதி + முதல் தளம் பகுதி + 3 தளங்களுடன் கூடிய 2 பிளாக்குகள் கொண்ட 360 குடியிருப்புகள் மொத்தம் 776 குடியிருப்புகளுடன் கொண்ட குடியிருப்புக் கட்டிடங்கள் மற்றும் தரைத்தளம் + முதல் தளம் + 2வது தளம் பகுதி கொண்ட 3 வணிக பிளாக்குகள், தரைத்தளம் + முதல் தளம் கொண்ட க்ளப் ஹவுஸ் கட்டிடத்துடன் கூடிய தொகுப்புக் குடியிருப்புக் கட்டிடம் பார்வை 1ல் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம், பார்வை–6ல் கண்டுள்ள கடிதத்தில் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஒப்பளிக்கப்படுகிறது.

2. விண்ணப்பதாரர் பார்வை 6–இல் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளை ஒப்புக்கொண்டு, ரசீது எண் B3635, நாள் 20.02.2017 மற்றும் ரசீது எண் B5037, நாள் 14.7.2017–ல் கீழ்கண்ட கட்டணங்களைச் செலுத்தியுள்ளார்கள்.

| | | |
|---|---|---|
| வளர்ச்சிக் கட்டணம் | ரூ.1,72,400 /– | ரசீது எண் B3635 நாள் 20.02.2017 |
| | ரூ.8,49,970 /– | ரசீது எண் B5037 நாள் 14.7.2017 |
| கூர்ந்தாய்வுக் கட்டணம் | ரூ.1,32,000/– | ரசீது எண் B5037 நாள் 14.7.2017 |
| வரன்முறைக் கட்டணம் | ரூ.10,77,500/– | ரசீது எண் B3635 நாள் 20.02.2017 |
| திறந்தவெளிக் கட்டணம் | இல்லை | |

Scanned by CamScanner

| | | |
|---|---|---|
| கட்டிடத்திற்கான காப்புறுதிக் கட்டணம்: | ரூ.1,60,00,000/– | ரசீது எண் B5037 நாள் 14.7.2017 |
| சென்னை குடிநீர் மற்றும் கழிவுநீர் வாரியத்திற்கான உள்கட்டமைப்பு வளர்ச்சி கட்டணம் | இல்லை | |
| அறிவிப்புப் பலகைக்கான வைப்புநிதி | ரூ.10,000/– | |
| உள்கட்டமைப்பு வசதி கட்டணம் | ரூ.2,25,42,560/– | |
| கழிவுநீர்த் தொட்டிக்கான காப்புறுதிக் கட்டணம் | ரூ.8,76,000 /– | |
| ஊக்கத் தளப் பரப்பு கட்டணம் | இல்லை | |
| மொத்தம் | ரூ. 4,16,60,430/– (ரூபாய் நான்கு கோடியே பதினாறு லட்சத்து அறுபதாயிரத்து நாநூற்று முப்பது மட்டும்) | |

3. உத்தேச திட்டத்திற்குக் கட்டிட அனுமதி வழங்குவதற்கு முன்னால், குடிநீர் வசதிகளுக்கான வடிவமைப்புகளை உறுதி செய்து கொள்ளுமாறு உள்ளாட்சி அமைப்பு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

4. மேல்நோக்கு வடிகட்டு கழிவு நீர்த்தொட்டியின் பராமரிப்பை முதலில் கட்டிட முனைவோரே மேற்கொள்ள வேண்டும். குடியிருப்போர் சங்கம் உருவாக்கப்பட்ட பின் அதனிடம் பொறுப்பை ஒப்படைக்கும் வரையில் கட்டிட முனைவோரே அதைப் பராமரிக்க வேண்டும்.

5. ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்தில் காட்டியுள்ளபடி மழை நீர் சேகரிப்பு அமைப்பைத் திருப்திகரமாக அமைக்காதிருப்பது, ஒப்புதலளிக்கப்பட்ட வரை படத்திலிருந்தும், வளர்ச்சி விதிமுறைகள் விதிகளுக்கும் மீறிய செயலாகக் கருதப்படும், அதன்மீது அமலாக்க நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

6. கிணறுகளும், மேல் நிலைத்தொட்டிகளும் கழிவு நீர்த் தொட்டிகளும், கொசுத் தொல்லைகள் இல்லாவண்ணம் சுகாதார முறையில் பாதுகாப்பாக மூடப்பட்டிருக்க வேண்டும்.

7. திட்ட அனுமதி எண். பி / சிறப்புக் கட்டிடம் / 25 A - J / 2018 நாள் 06.02.2018 என எண்ணிடப்பட்ட இரு ஒப்பளிக்கப்பட்ட வரைபடங்கள் இத்துடன் அனுப்பப்படுகின்றன. இத்திட்ட அனுமதி 06.02.2018ல் இருந்து 05.02.2023 வரை செல்லுபடியாகும்.

8. இந்த ஒப்பளிப்பு இறுதியானது அல்ல. உள்ளாட்சி அமைப்புச் சட்டத்தின் கீழ் கட்டிட அனுமதி பெறுவதற்கு, விண்ணப்பதாரர் பூந்தமல்லி பஞ்சாயத்து ஒன்றியத்தை அணுக வேண்டும். கட்டிட அனுமதி பெற்ற பிறகு தான் கட்டிடத்தைக் கட்டத் தொடங்கலாம்.

9. நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம் 1971ன் வகைப்பாட்டிற்கு ஏற்ப கட்டிடங்களுக்கு திட்ட அனுமதி வழங்கப்படுகிறது. அதில் கட்டமைப்பு உறுதிப்பாடு மற்றும் கட்டுமானத்தின்போது பாதுகாப்பு போன்றவை இடம் பெறவில்லை. எனினும் இந்த வகையான அம்சங்கள் உள்ளாட்சித் துறை விதிகளில் உள்ளது.

கட்டிடத்தின் கட்டமைப்பு உறுதிபாட்டை பொறுத்தவரை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி சட்டம் 1920ல் கட்டிட விதியில் கூறியுள்ளது போல் அதாவது பெருநகர சென்னை நகர மாநகராட்சி சட்டம் 1919, தமிழ்நாடு மாவட்ட நகராட்சி விதிகள், தமிழ்நாடு ஊராட்சி விதிகள், இது உள்ளாட்சிதுறை அதிகாரத்தின் கீழ் வருகிறது. தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம் 1971 மூலம் வழங்கப்படும் திட்ட அனுமதியில் கட்டமைப்பு உறுதிப்பாடு இடம் பெறவில்லை. இருப்பினும், கட்டிடத்தின் தொடர் கட்டமைப்பு உறுதிப்பாடு மற்றும் கட்டுமானத்தின் போது பாதுகாப்பு போன்றவைகள் விண்ணப்பதாரர் / அபிவிருதியாளர் / பொது அதிகார நபர் மற்றும் வரைபடத்தில் கையொப்பமிட்டுள்ள கட்டமைப்பு பொறியாளர் / உரிமம் பெற்ற நில அளவையர் / கட்டிட வடிவமைப்பாளர் அவர்களின் பொறுப்பாகும்.

10 செ.பெ.வ.குழுமம் சட்டபூர்வமாக திட்ட அனுமதி அளிப்பதன்மூலம் விண்ணப்பதாரின் பேரில் நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு, விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையத்தில் குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன்மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன்மேல் வேறு யாரும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய செ.பெ.வ. குழுமம் பொருத்தமான அமைப்பு அல்ல.

11. கட்டிடம் கட்டப்படுவதைக் கண்காணிக்குமாறும், அது ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்தின்படியே கட்டப்படுகிறது என்பதை உறுதி செய்து கொள்ளும்படியும், அவ்வாறில்லாமல், ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டப்பட்டால் உடனுக்குடனேயே அமலாக்க நடவடிக்கை எடுக்குமாறும் உள்ளாட்சி அமைப்பு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

Scanned by CamScanner

12. தமிழ்நாடு அரசு, அரசாணை எண் G.O.Ms.No.112, H&UD Dept. நாள் 22.6.2017–ல் கட்டிட, மனை விற்பனை (முறைப்படுத்தலும் மற்றும் மேம்படுத்தலும்) விதிகள் 2017–க்கு ஒப்புதல் அளித்துள்ளது. இதன்படி மனை/கட்டிடம் விற்பவர் உத்தேசிக்கப்படவிருக்கும் மனை, கட்டிடம் (அ) அபார்ட்மெண்ட்டிற்கு விளம்பரம் செய்யவோ விற்பனை செய்யவோ முன்பதிவு செய்யவோ, விற்கவோ (அ) விலை அறிவிப்பு செய்யவோ மனை, கட்டிடம் (அ) அபார்ட்மெண்ட்டுகளை வாங்குபவர்களுக்கு அழைப்பு விடுக்கவோ எதுவாக இருந்தாலும், அக்கட்டிட, மனை விற்பனை திட்டத்தை தமிழ்நாடு கட்டிட, மனை விற்பனை ஒழுங்குமுறை குழுமத்தில் பதிவு செய்த் பிறகே, செயல்படுத்த வேண்டும் என்ற நிபந்தனைக்கு உட்பட்டு இந்த திட்ட அனுமதி ஒப்பளிக்கப்படுகிறது.

13. கீழ்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு இந்த திட்ட அனுமதி ஒப்பளிக்கப்படுகிறது:

i. வெள்ளநீர் மூழ்கும் அபாயம் குறித்த பொதுப்பணித்துறையின் தடையின்மைச் சான்றிதழை பணிநிறைவு சான்றிதழுக்கு விண்ணப்பிக்கும்போது சமர்பிக்க வேண்டும் மற்றும் அதில் கூறப்பட்டுள் நிபந்தனைகளை கடைபிடிக்க வேண்டும்.

ii. கட்டுமானப் பணியின் போது உத்தேச இடத்தில் செல்லும் குறைந்த அழுத்த லைனை நீக்கவேண்டும்.

iii. அரசு வழக்கறிஞரிடமிருந்து உத்தேச இடத்தின் நில அளவை எண் 139 மற்றும் 140க்கான உரிமையின் மீதான சட்ட கருத்தை பணிநிறைவு சான்றிதழுக்கு விண்ணப்பிக்கும்போது சமர்பிக்க வேண்டும்.

iv. நீச்சல் குளத்தின் கட்டுமானப் பணி தொடங்கும் முன்பாக அதற்கான உத்தரவை செயல் குழுமத்திடமிருந்து தடையின்மைச் சான்றிதழ் பெற்று அதனை பணிநிறைவு சான்றிதழுக்கு விண்ணப்பிக்கும்போது சமர்பிக்க வேண்டும்.

v. நீச்சல் குளத்தை பயன் படுத்துவதற்கு முன்பாக இதற்காக அமைக்கப்பட்ட கமிட்டியிடமிருந்து தடையின்மைச் சான்றிதழை பெறவேண்டும்.

vi. நீச்சல் குளத்திற்கான அரசானை எண். 97, MAWS துறை, நாள் 07.07.2015ல் கண்டுள்ள நிபந்தனைகளை கடைபிடிக்க வேண்டும்.

vii. பார்வை 3ல் கண்ட சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்தின் கடிதத்தில் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளை கடைபிடிக்க வேண்டும்.

viii. குறைந்த வருவாய் பிரிவினருக்காக ஒதுக்கிய குடியிருப்பு பகுதியினை ஒருங்கினக்கவோ அல்லது குறைந்த வருவாய் பிரிவினரல்லாதவர்க்கு ஒதுக்கீடு செய்யவோ கூடாது என்ற நிபந்தனையை கடைபிடிக்க வேண்டும்.

ix. பதிவு செய்யப்பட்ட தொழில் சார்ந்த வல்லுநரிடம் பெறப்பட்ட போதுமான வடிவமைப்பு சான்றிதழின்படி மேல்நோக்கு கழிவு நீர் சுத்திகரிப்பு அமைப்பு கட்டப்பட வேண்டும். மேலும் இந்த கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் பராமரிப்பை கட்டிட முனைவரே மேற்கொள்ள வேண்டும்.

தங்கள் உண்மையுள்ள,

6/2/2018

உறுப்பினர்–செயலருக்காக.

06/2/18

இணைப்பு:

1. ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்தின் 2 படிகள்.
2. திட்ட அனுமதியின் 2 படிகள்.

நகல்:

1. திரு. M. வள்ளல் R.C.K மற்றும் மூவர்.
   பொது அதிகாரம் பெற்றவர் திரு. M.கண்ணன்,
   எண்.27, சரவணன் தெரு,
   தி.நகர், சென்னை 600 017.
2. உறுப்பினர், உரியதுறை (Appropriate Authority)
   108, உத்தமர் காந்தி சாலை, நுங்கம்பாக்கம், சென்னை 600 034.
3. வருமானவரி ஆணையர், 168, உத்தமர் காந்தி சாலை,
   நுங்கம்பாக்கம், சென்னை 600 034.
4. துணைதிட்ட அமைப்பாளர், செயலாக்கப்பிரிவு (மத்திய பிரிவு),
   செ.பெ.வ.குழுமம், சென்னை–8.

Scanned by CamScanner

Chennai Metropolitan Development Authority
PLANNING PERMIT
(Sec 49 of T & C. P. Act 1971)

PERMIT No. 1183
B/Spl-Bldg/25 A-J/2018 Date of Permit 06-2-18

File No. BC/14247/16

Name of Applicant with Address Thiru Vallal RCK & others No. 27, Saravana street, T. Nagar, Ch-17

Date of Application 16/9/16

Nature of Development : ~~Layout/Sub-division of Land~~/Building construction/~~Charge in use of Land/Building~~ Group development of Residential of 26 Blocks in which 16 Blocks of Stilt Part / GF Part + 3F + 4th F Part with 416 DU, 4 nos of

Site Address. LIG Blocks of Stilt + 4th Floors, 2 nos of LIG Blocks of Stilt Part / GF Part + 1st Floor Part + 3 Floors with 360 DU

Division No. Totally 776 DU, 3 Blocks of GF + I Floor & II Floor part commercial & 1 Block of GF + FF Club House in S.nos. 133/1A, 134/2, 136/1, 136/2A, 136/2B, 137, 138, 139, 140, 141/1A1, 141/1B & 141/2 of Kovathuranchari Villa

Development Charge paid Rs. ........Challan No. B 3635 Date 20.12.17

Rs. 172400/-

& DR Rs. 8,49,970 challan no. B5037 dt. 14/7/17

PERMISSION is granted to the ~~layout/sub-division of land/~~ building construction/~~change in use of land/building~~ according to the authorised copy of the plan attached hereto and subject to the condition overleaf.

3. The permit expires on 05-02-2023 the building construction work should be completed as per plan before the expiry date. If it is not possible to Complete the construction, request for renewing the planning permit should be submitted to Chennai Metropolitan Development Authority before the expiry date. If it is not renewed before the said date fresh. Planning Permission application/has to be submitted for continuing the construction work when the Development Control Rules that may be currently in force at that time will be applicable. If the construction already put up is in deviation to the approved plan and in violation of rules. Planning permit will not ~~be renewed.~~

6/2/2018

For MEMBER SECRETARY

5/2/18 6/2/2018

Scanned by CamScanner

# அய்யப்பன்தாங்கல் ஊராட்சி தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர் (கி. ஊ) அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை:- திரு.பா.மணிமாறன்

ந. க. எண். 50 /2017-2018 நாள்: 20.03.2018

பொருள் : வரைபட அனுமதி - குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம் - அய்யப்பன்தாங்கல் ஊராட்சி திரு/திருமதி M. வள்ளல் R.C.K மற்றும் மூவர் பொது அதிகாரம் பெற்றவர் திரு. M. கண்ணன் என்பவர் கட்டிடம் கட்டுதல் - வரைபடம் ஒப்புதல் அளித்து உத்திரவு வழங்குதல் - தொடர்பாக.

பார்வை : 1. திரு/திருமதி M. வள்ளல் R.C.K மற்றும் மூவர் பொது அதிகாரம் பெற்றவர் திரு. M. கண்ணன், விண்ணப்பம் நாள்: 14.02.2018

2. அரசாணை எண். 225/ஊ.வ.துறை நாள்: 18.08.1997

3. உறுப்பினர்-செயலர், சென்னை பெருநகர வளச்சிக் குழுமம், அவர்களின் கடிதம் எண். பிசி1/14247/2016 நாள்: 06.02.2018

ஆணை :-

பார்வை 3ல் உத்திரவின்படி குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியத்தை சேர்ந்த அய்யப்பன்தாங்கல் ஊராட்சி நில அளவை எண். 133/1A, 134/2, 136/1, 136/2A, 136/2B, 137, 138, 139, 140, 141/1A1, 141/1B & 141/2 குளத்துவஞ்சேரி கிராமம், சென்னை-ல், - வாகன நிறுத்து தளம் பகுதி/தரைத்தளம் பகுதி + 3 தளங்கள் + 4வது தளம் பகுதியுடன் 416 குடியிருப்புகள் கொண்ட 16 பிளாக்குகள், குறைந்த வருவாய் பிரிவினருக்கான வாகன நிறுத்து தளம் + 4 தளங்களுடன் கூடிய 4 பிளாக்குகள் மற்றும் வாகன நிறுத்து தளம் பகுதி/தரைதளம் பகுதி + முதல் தளம் பகுதி + 3 தளங்களுடன் கூடிய 2 பிளாக்குதள் கொண்ட 360 குடியிருப்புகள் மொத்தம் 776 குடியிருப்புகளுடன் கொண்ட குடியிருப்புக்கட்டிடங்கள் மற்றும் தரைத்தளம் + முதல் தளம் + 2வது தளம் பகுதி கொண்ட 3 வணிக பிளாக்குகள், தரைத்தளம் + முதல் தளம் கொண்ட க்ளப் ஹவுஸ் கட்டிடத்துடன் கூடிய தொகுப்புக் குடியிருப்புக் கட்டிடம் கட்ட அனுமதி அளித்து உத்திரவிடப்படுகிறது.

Scanned by CamScanner

# நிபந்தனைகள்

1. 1997 ம் ஆண்டின் கட்டிட விதிமுறைகளின் படி கட்டிடத்தின் முன்புறமும் பின்புறமும் மற்றும் இருபக்கங்களிலும் திறந்த இடம் விடப்பட வேண்டும்
2. இவ்வாணை தமிழ் நாடு கட்டிட விதிகளின் 1997 ல் கூறப்பட்டுள்ள அனைத்து விதிகளுக்கும் உட்பட்டது. அரசு மற்றும் தனியார் நிலங்களில் ஆக்கிரமிப்பு ஏதும் செய்யக்கூடாது
3. நிலம் மற்றும் கட்டிடத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்ட வரைபடங்கள் மற்றும் உத்திரவுகள் கட்டிட வேலை நடந்து கொண்டிருக்கும்போது எந்த எந்த நேரமும் ஆய்வு செய்யும் வண்ணம் வேலை நடைபெறும் இடத்தில் வைக்கவேண்டும்.
4. அனுமதிக்கப்பட்ட கால அளவிற்குள் கட்டிடம் கட்டி முடிக்கவில்லையென்றால் இவ்வுத்திரவு காலம் புதுப்பிக்க வேண்டும்
5. ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடங்களில் மாறுதல் ஏதேனும் செய்ய வேண்டியிருந்தால் அதற்கான முன் அனுமதி பெற வேண்டும்.
6. இவ்வாணை மற்றும் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடங்களின் மூலம் விதிமுறைகளைப் பின்பற்றுவதில் மனுதாரர் ஏதும் உரிமை கோர முடியாது
7. இவ்வலுவலகத்திலிருந்து முடிவு அறிக்கை பெறாமல் மனுதாரர் கட்டிடத்தில் குடிபுகக்கூடாது
8. புதிய கட்டிடத்தையும் அதன் சுற்றுப்புறங்களையும் மற்றவர்களுக்குத் தொந்தரவு ஏற்படாவண்ணம் சுத்தமாக வைத்திருக்க வேண்டும்
9. கழிவுநீர் அனைத்தும் வீட்டின் சுற்றுச்சுவருக்குள்ளேயே பூமியில் உறிஞ்சப்படும் வகையில் கட்டப்பட வேண்டும்.
10. எந்த உபயோகத்திற்கு கட்டிட அனுமதி பெறப்பட்டதோ அந்த உபயோகத்திற்கு மட்டும் கட்டிடம் பயன்படுத்தபடவேண்டும்
11. கட்டிடம் முடிவுற்றதின் முடிவுற்ற விவரம் ஊராட்சிக்கு தெரிவிக்க வேண்டும்
12. நில உரிமை தொடர்பாகவோ (அ) வேறு விதத்திலோ ஏதேனும் பிரச்சினை இருப்பின் அது குறித்து ஆக்கிரமிப்பை அகற்றுதல் மற்றும் நீதிமன்றம் தொடர்பான நடவடிக்கைகள் இவ்வாணையை எந்த விதத்திலும் கட்டுப்படுத்தாது.
13. விண்ணப்பதாரர் தவறான ஆவணங்கள் மற்றும் தகவல்கள் கொடுத்து ஒப்புதல் பெற்றால் இவ்வாணை மாற்றப்படவோ (அ) ரத்து செய்யப்படலாம்
14. இவ்வாணை அளிக்கப்படும் நாளிலிருந்து ஓராண்டு காலத்திற்கு செல்லத்தக்கது
15. வீட்டுமனையின் எல்லைக்குள் மழை நீர் சேகரிப்பு கலன் அமைத்திட வேண்டும்

தனி அலுவலர்/வட்டார வளர்ச்சி அலுவலர் (கி. ஊ)
அய்யப்பன்தாங்கல் ஊராட்சி

பெறுநர்:

திரு/திருமதி M. வள்ளல் R.C.K மற்றும்
மூவர் பொது அதிகாரம் பெற்றவர்
திரு. M. கண்ணன்
எண். 27, சரவணன் தெரு,
தி. நகர், சென்னை - 600017

Scanned by CamScanner